மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தெரிவித்ததன் மூலமாக இதில் ஏதோ சதி வலை பின்னப்படுகிறது என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொய் வழக்கை எதிர்த்துக்கூட இன்று பல்லாயிரக்கணக்கானவர்கள் உண்ணாவிரதத்திலே கலந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசி முடியுங்கள்.

திரு. பி. ஆர். சுந்தரம்: அவரும் அந்த வழக்குகளையெல்லாம் சந்திப்பேன் என்று தான் கூறியிருக்கிறார். நீங்கள் இந்தப் பொய்யான வழக்குகளையெல்லாம் போட்டு, எங்களுடைய ஆட்சிக் காலத்திலே செய்த தவறுகள் என்று கூறி, பொய்யான வழக்குகளைப் போட்டிருக்கிறீர்கள். இவைகளையெல்லாம் சந்திக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே, பொய்யான வழக்குகளைப் போட்டு, தூங்குகின்ற புலியை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. நீங்கள் உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் முதலிலே உட்காருங்கள். உறுப்பினர் நேற்றையதினம் என் அறையிலே வந்து இதுபற்றிக் கொடுத்தார். 'இது உரிமைப் பிரச்சினையாகாது, அன்றாட அரசாங்க நடவடிக்கை' என்று தெளிவாகச் சொல்லிவிட்டேன். ஒரு வேண்டுகோள் வைத்தீர்கள். 'நான் இதை அவையிலே எழுப்புகிறேன், இதே பதிலை அவையிலே சொல்லுங்கள்' என்றீர்கள், நான் ஏற்றுக்கொண்டேன், அத்தோடு பிரச்சினை முடிந்தது.

4. தகவல் கோரல்

உறுப்பினர் காரில் வந்தபோது மறித்து காரை சிலர் பறித்துச் சென்றது குறித்து.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. வைத்தியலிங்கம் அவர்கள் தன்னுடைய இருப்பிடத்திலிருந்து, சட்டமன்றத்தை நோக்கி, சில நாட்களுக்கு முன்னால், இங்கே வருகிறபோது, கிண்டி காந்தி மண்டபம் அருகே அவரது காரை நிறுத்தி, காரிலிருந்து அவரை இறக்கிவிட்டுவிட்டு, சில நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், அந்த காரை பறித்துச் சென்றதாக சில செய்திகள் வந்தன. மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவருவதெல்லாம், இப்படிப்பட்ட நிதி நிறுவனங்களை நடத்திக் கொண்டிருப்பவர்கள்,

சட்டத்தைக் கையிலே எடுத்துக் கொண்டு சில குண்டர்களை வைத்துக்கொண்டு, இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினரே அவர் காரில், சட்டமன்றத்தை நோக்கி வருகிறபோது இறக்கிவிடப்படுவது என்பது மன்னிக்க முடியாத, வன்மையாகக் கண்டிக்கத்தக்க ஒரு செயலாகும். இப்படிப்பட்ட நிகழ்வுகள் இனி நடவாமல் இருப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடுமையான நடவடிக்கையை, இது போன்று குண்டர்களை வைத்துக் கொண்டு நிதி நிறுவனங்களை நடத்திக் கொண்டிருப்பவர்கள்மீது எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வைத்தியலிங்கம்.

திரு. மீ.அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றுமுன்தினம் கொண்டு வந்தது என்னுடைய சொந்த வண்டியல்ல, வாடகை வண்டி. உறுப்பினர் சொல்கின்ற அந்த நிகழ்வில், வழியிலே வண்டியை எடுத்துச் சென்றுவிட்டது உண்மை. பத்திரிகையில் வந்ததுபோல் எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படவில்லை. என்னிடம் வாதம் கூட செய்யவில்லை. எனக்கு எந்தவிதமான அசம்பாவிதமும் அவர்கள் செய்யவில்லை. என்னுடைய பைல்கள் மட்டும் அதிலே சென்றுவிட்டன என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் சொல்லி இருந்தேன். அவைகளைத் திரும்பப் பெற்று வந்து தந்துவிட்டார்கள். ஆனால், அந்த வண்டியை, எங்களை வழியிலே நிறுத்திப் பறித்துக்கொண்டு சென்றது உண்மைதான். அவர்கள் நிதி நிறுவனத்தார் என்றுகூடச் சொல்லவில்லை. வந்தார்கள், டிரைவரை இழுத்து வெளியே விட்டார்கள். நான் இறங்கி, 'என்ன' என்று கேட்பதற்குள் வண்டியை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். இதுதான் நடந்த உண்மையான சம்பவம்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நேற்றைய முன்தினம் நடந்த நிகழ்ச்சி. பேரவைத் தலைவர் என்ற முறையிலே உடனடியாக மாநகரக் காவல்துறை ஆணையர் அவர்களை அழைத்து இதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.